செங்கோல்
நிறுவனர்: டாக்டர் ம.பொ.சிவஞானம்
மலர்: 42 இதழ்: 19 சித்திரை 28 10-5-92 ஞாயிறு சென்னை விலை 50 காசுகள்

ஔவைக்கு விழா எடுப்போம்

திருக்கோவலூர் கபிலர் விழாவில்

சிலம்புச் செல்வர் ம பொ சி பேச்சு

4-5 92 அன்று திருக்கோவலூர் பண்பாட்டுக் கழகத்தின் சார்பில் நடந்த கபிலர் விழாவில் சிலம்புச் செல்வர் பேசியது வருமாறு:

திருக்கோவலூர் என்னும் சிற்றூரில் தமிழரிலே சாமான்யர் அறிந்திராத- இரண்டாயிரமாண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த—சங்கப்புலவர் கபிலர் பெயரால் விழா நடத்துகிறது. இன்றைய அரசியல் சந்தையில் விலைபோகாத 'பண்பாடு' என்னும் பெயரைக் கொண்ட கழகம் அந்த விழாவை நடத்துகிறது; தொடர்ந்து மூன்று நாட்கள் நடந்தும்மூன்றாவது நாளிலேயும் பெரும் திரளான மக்கள் குழுமி இருக்கிறீர்கள். உங்களிலேயும் பெண்கள் சரிநிகர் சமமாக இருக்கக் காண்கிறேன்.

அதனால், தொண்டு பருவத்தில் நான் 130கல தூரம் மோட்டாரில் பயணம் செய்து களைப்போடு வந்திருக்கிறேனென்றாலும், இந்தப் பேரவையின் அமைதியையும் அழகையும் கண்டு முதுமையை மறந்து இளமை உணர்வோடு பேசுகிறேன்,

சங்க இலக்கியங்களில் 278 பாடல்களை கபிலர் தன் பங்குக்குச் சேர்த்து வைத்திருக்கிறார் முல்லை, மருதம், குறிஞ்சி, நெய்தல்,பாலை ஆகிய ஐவகை நிலங்களையும் பாடிவைத்துள்ளார் பத்துப்பாட்டு எட்டுத் தொகை, பதினெண்கீழ் கணக்கு ஆகிய தொகை நூல்கள் அனைத்திலும் கபிலர் பாடல்களைக் காண முடிகிறது. அகத்திணை — புறத்திணை உள்ளிட்ட ஐந்திணைகளையும் பாடியுள்ளார்.

உ.வே.சா ஐயர்தாம்பதிப்பித்த புறநானூற்றுள் பாடினோர் வரலாறு என்னும் பகுதியில் 157 புலவர்களின் வரலாற்றைக் கூறுபவர் கபிலருக்கு அதிக பக்கங்களைத் தந்துள்ளார். ஆம்;மூன்று பக்கங்கள்! அதிலும் மனநிறைவு பெறாமல், 'இவருடைய விரிந்த வரலாற்றை பத்துப் பாட்டுப் பதிப்பிலுள்ள பாடினோர் வரலாற்றில் காணலாம்!' என்றுகூறி முடிக்காமல் முடிக்கிறார்.

பத்துப் பாட்டிலும் பாடிய புலவர் எட்டுப் பேருடைய வரலாற்றைக் கூறுபவர் கபிலருக்கே அதிக பக்கங்களை—ஆம்; 12 பக்கங்களைத் தந்துள்ளார். அந்த அளவிலும் மனநிறைவு பெறாதவர்போல,

> ''இவரது புலமை நலங்கள் இன்னும் எடுத்தெழுதப் புகின் மிக விரியு மாதலின் அஞ்சி இதனோடு நிறுத்தப் பெற்றன.''

எனக்கூறி முடிக்காமல் முடிக்கிறார்.

ஐங்குறு நூறு என்னும் தொகை நூலில் 'பாடினோர் வரலாறு' என்னும்தலைப்பில்புலவர் எண்மர் வரலாற்றைக்கூறுமிடத்தும் கபிலருக்கே அதிகபக்கங்களை-ஆம்; இரண்டுமுழு பக்கங்களுக்கு அதிகமாக உ.வே.சா. ஐயர் தந்துள்ளார்.

இதனால், சங்க காலப் புலவர்களிலே மிகவும் விரிவான வரலாறு படைத்தவர் கபிலரே என்பது புலனாகிறது. டாக்டர் உ. வே சாமிநாத ஐயரின் உள்ளத்தைக் கவர்ந்தவரும் இவரே.

கபிலர் வரலாற்றை இன்றைய சமுதாயத்தின் நிலையோடு ஒப்பிட்டு ஆய்வு நடத்தி ஒரு நூலாக்கினால் சுவையான சரித்திர சாசனமாக அமையும். தலைவர்கள் பெயர்கள் புதிது புதிதாக அமையும் மாவட்டங்களுக்கு வைக்கப்படுகின்றன இதுஎனக்கு மகிழ்ச்சி தருகிறது. முன்பெல்லாமும் இந்த வழக்கமுண்டு.

திருநெல்வேலி மாவட்டத்தில் 'நல்லாண் பிள்ளை பெற்றாள்' எப்போதும் வென்றான் என்னும் பெயர்களால் சிற்றூர்கள் இருக்கின்றன. இவை எவ்வளவு சிறப்பான பெயர்கள். நாம இனி கிராமங்களுக்கு வட்டங்க(தாலுக்காக்க)ளுக்கு சிற்றூர்களுக்கு புலவர்கள் பெயர்களை வைப்பதென்றால் சங்ககாலம் தொட்டு தற்காலம் வரை தோன்றியுள்ள புலவர்கள் பெயர்கள் எத்தனை எத்தனை— உண்டு.

கபிலர் பெயரால் இந்த ஊரில் தான் விழா நடத்தப்படுகின்றது. அரசு வள்ளுவருக்கு, பாரதியாருக்கு பாரதிதாசனுக்கு கடற்கரையில் சிலைகளை நிறுத்தி, அவர்களுடைய பிறந்த நாளிலோ, நினைவு நாளிலோ முதல் வரும் அமைச்சர்களும் அரசியல் தலைவர்களும் மாலைகள் அணிவித்து மரியாதை செய்கின்றனர் அதுபோல கடற்கரையிலுள்ள ஔவையார் சிலைக்கும் மாலையணிவித்து மரியாதை செய்யக் கூடாதா? ஔவையார் சரித்திர நாயகி! ஆரம்பப் பள்ளிகளில் ஆத்திசூடி தொடங்கி, உயர் நிலைப்பள்ளியில் நீதி நூல்களையும் தனிப்பாடல்களையும் கல்லூரிகளில் சங்கப்பாடல்களையும் பாடஞ்சொல்லித்தர அரசு வகுத்துள்ள பாடத்திட்டம் இடந்தருகிறது. அதுபோல ஔவையார் நாளாக ஒரு நாளைத் தேர்ந்தெடுத்து அரசும் மக்களும்கொண்டாடினாலென்ன?

ஜனவரி 15ஐ வள்ளுவர் நாளாகத் தேர்ந்தெடுத்துக்கொண்டாடுகிறோமே, அதற்கு என்ன சரித்திரச் சான்று? அப்படி ஔவையார் பெயராலும் ஒரு நாளை அரசு தேர்ந்தெடுத்தாலென்ன?

தற்போது ஒரு பெண்மணி தமிழகத்தின் முதல்வராக இருக்கிறார். இவர் காலத்தில் இது நடைபெறலாமே!

'ஔவையார் ஒருவரா, இருவரா, மூவரா?—என்று புலவர்கள் போராடுகிறார்கள் அதை அவர்களிடமே விட்டுவிடுவோம், 'ஔவையார் என்ற பெயரால்

(7-ம் பக்கம் பார்க்க)

செங்கோல்

ஆசிரியர்: ம.பொ.சிவஞானம்

10-5-92] ஞாயிறு [சென்னை

சத்தியஜித் ரே அமரரானார்!

வங்கமொழி திரைப்பட இயக்குநர் திரு. சத்தியஜித் ரே அவர்கள் கடந்த ஏப்ரல் 21 ஆம் தேதியன்று இயற்கையெய்தியதறிந்து வருந்துகிறோம்.

திரைப்பட உலகுக்கு-குறிப்பாக, வங்கமொழி திரைப்படத் துறைக்கு உலகளாவிய பெருமை தேடியவர்திரு,சத்தியஜித் ரே

அவர் நோயுற்று படுக்கையிலிருந்த நிலையிலும், உலகப் பெரும்புகழுக்குரிய ஆஸ்கர் பரிசும், 'பாரத ரத்னா' விருதும் அவரை வந்தடைந்தன வென்றால், அவருடைய புகழுக்கு உவமை சொல்ல வேறு ஆளேது?

இத்துடனன்றி, உலகளாவிய விருதுகள் பலவும் அவரை முன்னரே வந்தடைந்தன. 72 வயதுவரைதான் வாழ்ந்தாரென்றாலும், ஒரு நூறுவயதில் அடையக்கூடிய பெரும் புகழைத் தன் பெயரோடு சேர்த்து விட்டார், அவர் அதிர்ஷ்டசாலி, வங்காளியாகப் பிறந்ததால்!

வங்காளி இனத்தவர் தங்களில் தோன்றி சாதனைபுரிபவர்களை உபசரிக்கத் தெரிந்தவர்கள். அதனால் இராமகிருஷ்ணர் விவேகானந்தர் போன்ற மெய்ஞானியரும்; செகதீச சந்திரபோஸ், சர் பி.சி.ரே போன்ற விஞ்ஞானியரும்; ராசா ராம்மோகனராய் போன்ற சீர்திருத்தவாதிகளும்; ரவீந்திரநாத் தாகூர், பங்கிம்சந்திரர், சரோஜினிதேவி போன்ற கவிஞர்களும், தேசபந்து நேத்தாஜி போன்ற மாவீரர்களும் உலக முழுவதற்கும் அறிமுகமாக முடிந்திருக்கிறது.

இத்தனைக்கும் திரு.ரே, நடிக நட்சத்திரமல்ல; திரைப்பட இயக்குநர்தான்! அந்த அளவில் தமக்கும் தம்மைப் பெற்றெடுத்த வங்க மாநிலத்துக்கும் பாரத தேசத்துக்கும் பெரும் புகழ் தேடிவிட்டார்!

கலைஞர் ரே அவர்கள் கட்சி அரசியலில் புகுந்து தம் காலத்தை வீணாக்காமல், கலைத்துறையிலேயே முழு கவனத்தையும் செலுத்தினார், அதனால், எல்லாக் கட்சிகளும் அவரது மறைவுக்கு வருந்துகின்றன. வங்க மாநில அரசு ராஜ மரியாதை செய்தது! நாடாளுமன்றமும், தமிழக சட்டமன்றமும்கூட அஞ்சலி செலுத்தின.

தமிழ்நாட்டு திரைப்பட இயக்குநர்களும், கதை-வசன கர்த்தாக்களும், நடிக—நடிகையரும் சிந்திக்க வேண்டிய விஷயமிது!

வங்கத்தில் பிறந்து உலகளாவிய புகழ்பெற்ற சத்யஜித் ரேக்கு நாமும் அஞ்சலி செலுத்துகிறோம்!

வங்க மாநிலமே, நீ வருந்தாதே! இன்னுமின்னும் பல சத்தியஜித் ரேக்களை உன்னால் தோற்றுவிக்க முடியும்.

பயங்கர வாதமும் காந்தி

(-ம்3 பக்கத் தொடர்ச்சி)

மற்று, ரௌலட் குழுவை நியமித்தபோது, 'பிரிட்டிஷ் 'அரசு' நாட்டில் பரவலாகிவரும் பயங்கரவாதிகளை ஒடுக்கவே என்று அறிவித்தது.

ரௌலட் குழுவும் தனது அறிக்கையிலே, பயங்கர இயக்கத்தையே பிரதானமாகக் குறிப்பிட்டு, அதனை ஒடுக்க நாட்டில் அமைதியை நிலைநாட்ட விரும்புவோரின் ஆதரவைக் கோரியது!

ஆகமொத்தம் பயங்கரவாதிகளான தேசபக்தர்கள் பற்றி யாரும் கவலைப்படாத நேரத்திலேதான் அகிம்சா மூர்த்தியான காந்தியடிகள் ரௌலட் சட்ட எதிர்ப்பில் ஈடுபட முனைந்தார்.

ரௌலட் சட்டங்கள் அரசு கெஜட்டில் வெளியானபோது காந்தியடிகள் கடுமையாக நோயுற்று, பம்பாயில தங்கி சிகிச்சை பெற்று வந்தார்.

அந்த நிலையிலும் தன்னந்தனியாகத் தமது சொந்தப் பொறுப்பில் ரௌலட் சட்டத்தை எதிர்த்து சத்தியாக்கிரகப் போர் தொடங்க முடிவெடுத்தார். பயங்கரவாதிகளின் அணுகுமுறையில் அடிகள் வேறுபட்டாலும் அவர்களுடைய தீவிர தேசபக்தியை— விடுதலை ஆர்வத்தை—அவர் பெரிதும் மதித்தார். ஆகவே, தவறான பாதையில் நடைபோட்டு வரும் பயங்கரவாதிகளைக் காப்பாற்றும் வகையில் ரௌலட் சட்டத்தை எதிர்த்துப் போர்தொடுக்க அடிகள் முடிவெடுத்தார். அதனால், பயங்கரவாதிகளை சாத்வீக சத்தியாக்கிரக முறையில் நம்பிக்கை கொள்ளச் செய்ய முடியுமென்றும் அவர் உறுதியாக நம்பினார்,

காந்திஜி 1914ல்தான் தென்னாப்பிரிக்காவிலிருந்து பாரதம் திரும்பினார். ஆப்பிரிக்காவிலிருந்த போது, ஒப்பந்தக் கூலிகளுக்கு விடுதலைதேட தாம் கடைப்பிடித்த சத்தியாக்கிரகப் போர்முறையில் வெற்றிகண்டாராதலால், அதையே இந்தியாவிலும் கடைப்பிடிக்க முடிவெடுத்தார்.

ரௌலட் சட்ட எதிர்ப்பில் ஈடுபடுவதற்கு முன்பே பீகாரிலும் குஜராத்திலும் பல பிரச்னைகளில் அரசுடன் போராடி வெற்றிகண்டாராதலால் தமது சத்தியாக்கிரகப் போர்முறை இந்திய விடுதலைக்கும் பொருந்தும் என்ற நம்பிக்கை அவருக்கு ஏற்பட்டது. ரௌலட் சட்ட எதிர்ப்பு வெற்றிபெற்றால் அது அகிம்சைக்குக் கிடைத்த வெற்றியாகுமென்றும் தீவிரவாதிகளாகிவிட்ட இளைஞர்களை அமைதியான திசைக்கு மாற்றமுடியுமென்றும் நம்பினார்.

இரண்டாவது உலகப்போர் 1918ல் தனக்கு வெற்றிகரமாக முடிந்ததைச் சாதகமாக்கிக்கொண்டு இந்திய விடுதலை இயக்கத்திலே—குறிப்பாக, இந்திய தேசிய காங்கிரசிலே திசைமாறிகளின் விலாசங்களைத் திரட்ட பிரிட்டிஷ் அரசு முயன்றது.

புதுவையில் அஞ்ஞாதவாசம் செய்து வந்தவர்களுக்கும் இந்தியச் சிறைகளிலிருந்தவர்களுக்கும் பொது மன்னிப்பு அளித்து விடுதலை செய்தது. இவர்களிலே எவரும் பயங்கரவாதிகளல்லர்; காங்கிரஸ்காரர்களே!

பிரிட்டிஷார் அளித்த சீர்திருத்தத்தின் பலனை அனுபவிக்க இந்திய மாநிலந்தோறும் வகுப்புவாதச் சக்திகள் புதிய புதிய கட்சிகளைத் தோற்றுவித்தன. அவற்றுள் ஒன்று சென்னை மாகாணத்தில் தோன்றிய ஜஸ்டிஸ்கட்சி! மகாராஷ்டிரத்திலும் பிராமணருக்கு எதிரான வகுப்புவாத இயக்கம் முளைத்தது. பஞ்சாபில் சீக்கிய மதவாத இயக்கம் பிறந்தது.

(தொடரும்)

பயங்கர வாதமும் காந்தி சகாப்தமும்

(ம. பொ. சிவஞானம்)

6

பிரிட்டிஷ் நீதிபதி சர் சிட்னி ரௌலட் என்பவர் தலைமையில்குழு நிறுவப்பட்டதால், அதற்கு 'ரௌலட் குழு' என்னும்பெயரே பொருந்துவதாயிற்று அக்குழு தயாரித்த இரு வேறு சட்டங்களுமே 'ரௌலட் சட்டங்கள்' என்றே பெயர் பெற்றன.

முதல் சட்டம் தற்காலிகமானது, அப்போது நடைபெற்றுக் கொண்டிருந்த முதலாவது உலகப் பெரும் போரை முன்னிட்டு, இந்தியாவில் நடைமுறையிலிருந்த பாதுகாப்புச் சட்டம் போர் முடிந்ததும் ரத்தாகி விடுவதை எதிர்பார்த்து, அதனிடத்தில் விடுதலைக் கிளர்ச்சியை ஒடுக்க தயாரிக்கப்பட்டது!

இரண்டாவது சட்டம் அப்போது நாட்டில் நடைமுறையிலிருந்த கிரிமினல் திருத்தச் சட்டத்தை பலவகையிலும் கடுமையாக்கச் செய்வதற்குரியதாகும்.

இந்த இரு சட்டங்களும் அப்போது டில்லியில் 'இம்பீரியல் சட்ட சபை' என்னும் பெயரால் இயங்கி வந்த மன்றத்தில் இரு மசோதாக்களாக பிரேரேபிக்கப்பட்டன.

தனிநபர் பயங்கர இயக்கத்தை ஒடுக்குவதென்ற அறிவிப்பின் பேரில் பிறந்த இந்த இரு மசோதாக்களும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் பிரசாரத்திற்கு 'அரசநிந்தனை' எனப் பெயர் சூட்டி, அதுசம்பந்தமான கையெழுத்துப் பிரதியொன்றை அச்சிடுவதற்கென்றோ, பத்திரிகையில் பிரசுரிப்பதற்கென்றோ, பிறருக்கு வினியோகிப்பதற்கென்றோ ஒருவர் தன் வசம் வைத்திருப்பதையும் தண்டனைக்குரிய குற்றமாக்கியது.

ஏற்கெனவே, அரச நிந்தனையாகப் பேசுவதையோ, எழுதுவதையோ சிறைத்தண்டனைக்குரிய குற்றமாக்கும் கிரிமினல் திருத்தச் சட்டம் 1908ல் நடைமுறைக்கு வந்தது. அதன்படித்தான் வ.உ.சிதம்பரம்பிள்ளை, சுப்பிரமணிய சிவா, லோகமான்ய பாலகங்காதர திலகர் ஆகியோர் தண்டிக்கப்பட்டுச் சிறையிலிருந்தனர்

புதிய ரௌலட் சட்டமோ அதுபோன்ற—ஆம்; அரசநிந்தனையான பிரசுரமொன்றை வைத்திருப்பதையும் கடுமையான தண்டனைக்குரிய குற்றமாக்கியது.

''ரௌலட் மசோதாக்களானவை, பிரிட்டிஷ் ஆட்சிக்கு உள்ளூர ஏற்பட்டுவிட்ட நோயின் நிச்சயமான அறிகுறிகள்'' என்றார் காந்தியடிகள்.

1917ல் ரௌலட் குழு நியமிக்கப்பட்ட தென்றாலும் சரியாக ஒன்றரை ஆண்டுக் காலத்திற்குமேலாக நாடுமுழுவதும் சுற்றுலாச் செய்து பயங்கர இயக்கம் பற்றி பல பிரமுகர்கள் உயர் அதிகாரிகள் ஆகியோரிடம் விசாரணை நடத்தி, தேவையான அரசு ஆவணங்களைப் பரிசீலனை செய்த பின், ரௌலட் சட்டங்களைத் தயாரித்து, 1919 பிப்ரவரியில் வெளியிட்டது, கொஞ்சமும் தாமதியாமல் மார்ச்சிலேயே மசோதாக்களை உருவாக்கி இம்பீரியல் சட்டமன்றத்தில் பிரேரேபித்தது இந்திய அரசு மார்ச்சில் முதல் சட்டம் நிறைவேற்றப்பட்டது ராசவிசுவாசிகளின் ஆதரவைப் பெற்று.

வன்முறைச் செயல்கள் வலுவாகவுள்ள பிரதேசங்களில் அரசுத் துரோகிகள் (ஆம்; தேசபக்தர்களுக்கு பிரிட்டிஷார் இட்டபெயர்) வழக்குகளை உடனுக்குடன் விசாரித்துத் தீர்ப்புவழங்க மூன்று நீதிபதிகளைக் கொண்ட நீதிமன்றங்கள் நியமிக்க முதலாவது ரௌலட் சட்டம் வழிவகை செய்தது.

இந்த நீதிமன்றங்களின் தீர்ப்பை ஆட்சேபித்து மேல் கோர்ட்டுக்கு அப்பில் செய்யவும் உரிமை கிடையாது. ரௌலட் மசோதாக்கள் 1919 மார்ச்சு 18ல் இம்பீரியல் சட்டமன்றத்தில் சட்டமாக்கப் பட்டுவிட்டன.

அந்த மசோதாக்கள் இம்பீரியல் சட்ட சபையில் விவாதத்திலிருந்தபோது ஒருநாள் மட்டும் பார்வையாளர் காலரியில் அமர்ந்து காந்தியடிகள் நடவடிக்கைகளைக் கவனித்தார். அன்று மகாகனம் வி.எஸ். சீனிவாச சாஸ்திரியார் மசோதாவைக் கண்டித்துப் பேசியதை, அவர்பால் பேரன்பு கொண்டவரான அடிகள் மிகுந்த கவனத்துடன் கேட்டார். தமது ஆயுட்காலத்தில் அடிகள் பார்வையாளராக சட்டசபைக்குள் சென்றமர்ந்தது அன்றைய தினந்தான்

ரௌலட் சட்டங்கள் நடைமுறைக்கு வந்தபோது, இந்திய காங்கிரஸ் மகாசபையின் நிலை என்ன? தேசமக்களுக்கு விடுதலை ஆர்வத்தைத் தந்த தாய்ச்சபையான காங்கிரசின் தலைவராக ஜனாப் ஹசன் இமாம் என்பவர் இருந்தார்.

ரௌலட் சட்டம்பற்றி காங்கிரசிலே எவரும் மூச்சுக்கூட விடவில்லை. தேசியத் தலைவர்களெல்லாம் மௌனம் சாதித்தனர் 1917ல் ரௌலட் கமிட்டியை லண்டனிலுள்ள பிரிட்டிஷ் அரசு நியமித்தபோது, அதனுடன் சேர்த்து மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தையும் அறிவித்தது. ஆம்; மிதவாத அரசியல் தலைவர்களைத் திருப்திப்படுத்த!

அந்த ஆண்டிலே(1917)தான் கல்கத்தாவில் கூடிய காங்கிரஸ் மகாசபையின் தலைவராக திருமதி அன்னிபெசன்ட் இருந்து, ''இந்தியாவிற்கு வேண்டியது பிரிட்டிஷ் மேலாதிக்கத்திற்குட்பட்ட சுயாட்சியே, என்றுநமது தலைமையுரையில் பிரகடனம் செய்தார். அதற்கு ஹோம்ரூல் எனப் பெயர் தந்தார். இந்தக் கோஷம் பெரும்பாலான காங்கிரஸ்காரர்களைக் கவர்ந்தது. அதனால் காங்கிரசிலே பெசன்ட் செல்வாக்கு கொடிகட்டிப் பறந்தது

அப்போதுதான் ஆறாண்டுகால சிறைத் தண்டனையை பர்மாவிலுள்ள மாண்டலே சிறையில் அனுபவித்துவிட்டு விடுதலையான லோகமான்ய திலகரும் பிரிட்டிஷார் வழங்கிய அரசியல் சீர்திருத்தத்தை காங்கிரஸ் ஏற்க வேண்டுமென்று அறிக்கைவிட்டார்.

அமெரிக்காவிலிருந்து இந்திய அரசு அனுமதியோடு தாயகம் திரும்பிய லஜபதியும் சீர்திருத்தத்திற்கு ஆதரவு காட்டினார்

தமிழகத்திலே வ.உ. சிதம்பரனாரும்சர் சி.பி.இராமசாமி ஐயருங்கூட சீர்திருத்தத்தை வரவேற்றனர்.

1909ல் பிரிட்டிஷார் வழங்கிய மிண்டோ — மார்லி சீர்திருத்தத்தைவிட அதிக அளவிலான அதிகாரங்களை மத்திய அரசிடமிருந்து மாநிலங்களுக்கு மாற்றித் தருவதாக இருந்தது மாண்டேகு—செம்ஸ்போர்டு சீர்திருத்தம்.

தாம்வழங்கிய சீர்த்தத்திற்கு ஆதரவு தேடும்பொருட்டு பிரிட்டிஷ் மந்திரி மாண்டேகு இந்தியாவுக்கு வந்து தலைவர்களில்பலரைச் சந்தித்துப் பேசினார்

இதனாலெல்லாம் காங்கிரஸ் தலைவர்களும் அவர்களுக்கு சற்று கீழ் நிலையிலிருந்த மிதவாதிகளும் ரௌலட் சட்டத்தினால் விளைய விருக்கும் கொடுமைகள் பற்றிச் சிந்தித்துப் பார்க்கவுமில்லை.

(2ம் பக்கம் பார்க்க)

ஐயாவின் சிலப்பதிகாரத்

''அம்மையார் படித்தபடியே ஒவ்வொரு பாட்டிற்கும்பொருள் சொல்லச் சொன்னார், 'சொல்ல முடியாதபோது கச்சேரியை நிறுத்திவிடலாம்' என்றார். ஆயினும், நான் படுக்கையை விட்டெழுந்து, சாய்வு நாற்காலியில் அமர்ந்து 'ஒவ்வொரு பாட்டின்முடிவிலும் அதற்குப்பொருள் கூறினேன் முதலில் ஈனக்குரலில் தொடங்கி பின்னர் குரலை உயர்த்தினேன்

இளங்கோவின் இசைப் பாடல் என் உயிரைக் காப்பாற்றிவிட்டது, ஆம்; மந்திரியாரின் மனைவி தந்த மனோதத்துவச் சிகிச்சை பலனளித்தது.

''நான் சிலப்பதிகாரம் படித்த தன்பயனை அன்றுதான் அடைந்தேன். ஆம்; அன்றுதான் உண்மையில் 'சிலம்புச் செல்வன்' ஆனேன்!

''ஆகஸ்டுக்கிளர்ச்சியின்போது வடபுலத்திலுள்ள அமராவதி மாவட்டச் சிறையில் மரணத்துடன் போராடிய இரவிலே, சக அரசியல் கைதியான மதுரை திரு சிதம்பர பாரதியை நானே அழைத்து, இராமலிங்க சுவாமிகளின் திருவருட்பாவிலுள்ள 'மகாதேவ மாலை'யைப்பாடச் சொல்லி அதைக் கேட்டபடியே உறங்கி உயிர் பிழைத்தேன் அதுபோல மலாசியாவிலும் சிலப்பதிகாரப்பாடல்களால் புது ஜீவனைப் பெற்றேன்''

('செங்கோல்' 16—6—66)

மற்றொரு சமயத்திலும் சிலம்புச்செல்வர் நோயுற்று படுக்கையிலிருந்தபோது, இளங்கோ விழாவில் தலைமை தாங்க இருந்தார். அது 1957 ஏப்ரல் 14ல் செயின்ட் மேரிஸ் மண்டபத்தில் நடந்த இளங்கோ விழாவிலாகும்.

ஆனால்,விழாவுக்குத் தலைமை தாங்குவார் என விளம்பரப்படுத்தப்பட்டிருந்த நிலையில்ஐயா ம. பொ. சி. அவர்கள் எதிர்பாரா விதமாக விழாவுக்குஇரண்டு நாட்களுக்குமுன்பு வீட்டு வாசற்படியை விட்டிறங்கும்போது கால்வழுக்கி விழுந்ததால், முதுகுத் தண்டு எலும்பின் அடிப்பகுதி முறிந்து சென்னை பொது மருத்துவமனையில் படுக்கையிலிருந்தார்.

அதனால், அவரது தலைமையுரையை விழாக் குழுவினர்நாடாவில் பதிவுசெய்துவிழாவில் ஒலிபரப்ப ஏற்பாடுசெய்துவைத்திருந்தனர். ஆனால்,ஐயாவின் மனத்துணிவானது யாரும் எதிர்பாராத வகையில் அவரை விழாவில் கலந்துகொண்டு நேரடியாகவே பேச செய்தது. இந்த சரித்திர ரீதியான சம்பவம்பற்றி 'செங்கோல்' 21-4-57 இதழில் வெளியான செய்தி வருமாறு:

''யாரும் எதிர்பாராத விதமாக ம. பொ. சி. கையில் தடியூன்றி, தள்ளாடி நடந்த வண்ணம்—இருபுறமும் கழகத் தோழர்கள் அவரைத் தாங்கிப் பிடித்துவர—மண்டபத்தில் நுழைந்தார். அதைக் கண்டு விழாவில் திரண்டிருந்த மக்கள் வியப்புற்றவர்களாகி 'ம. பொ. சி.வாழ்க!' என்று பன்முறை வாழ்த்தி வரவேற்றனர்.

''விழாவுக்குத் தலைமை தாங்கிய திரு. ம. பொ. சி. உடல் நலக் குறைவால் ஒலிபெருக்கி முன்நிற்கவும் நாற்காலியில் அமரவும் இயலாமல், படுக்கையிலிருந்த வண்ணம் விழாவில்பங்கு கொண்டார். அவர் சார்பில் 'தினமணி' துணையாசிரியர் திரு ஏ ஜி. வெங்கடாச்சாரியார் விழாவை நடத்தி வைத்தார்.

''திரு. ம. பொ. சி படுக்கையில் படுத்த வண்ணம் நிகழ்த்திய முன்னுரை வருமாறு:

''இவ்வாண்டு இளங்கோவிழாவை யொட்டி தமிழகம் முழுவதும் சுற்றுலாச்செய்து சிலப்பதிகாரப் பிரச்சாரத்தை ஒரு பேரியக்கமாக—கலாச்சாரத் தொண்டாக மாற்றத் திட்டமிட்டிருந்தேன். ஆனால், என் திட்டம் நிறைவேறவில்லை. ஆகவே, தலைநகரில் நடைபெறும் இந்த விழாவிலேனும் பங்குகொள்வதென்ற பிடிவாதத்துடன் நான் இங்கு வந்தேன்.

''மருத்துவ மனையிலிருந்து கொண்டே விழாவில் அறிஞர்கள் நிகழ்த்தும் உரைகளை வானொலிப் பெட்டி வாயிலாக நானும் எனது தலைமை யுரையை டேப் ரிக்கார்டர் வாயிலாக நீங்களும் கேட்கவும் என் அரிய நண்பர் அ.ச. ஞானசம்பந்தம் மிகவும் திறமையாக ஏற்பாடு செய்திருந்தார். என் உருவத்தை காணாமல் எனது குரலை மட்டும் நீங்கள் கேட்கச் செய்வதன் மூலம் நான் ஆவி உலகத்தின் பொருளாகக் கருதப்படுவேனோ என்ற அச்சத்தால், நண்பர் செய்த ஏற்பாட்டைக் குலைத்து அவர்களுக்கு அறிவிக்காமலே இந்த விழாவுக்கு வந்துவிட்டேன்.

''ஊழ்வினை உறுத்துவந்து ஊட்டும்'' என்று கூறினார் இளங்கோவடிகள். அந்த ஊழ்வினை இளங்கோ விழாவை யொட்டி நான் வகுத்த திட்டத்தைத் திருத்திவிட்டது. இளங்கோ என்னை வெற்றிகண்டு விட்டார்.

''ஆனால், 'ஊழையும் மன உறுதியால் புறங்காணலாம், என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார், அதனாற்றான், ஊழ்வினையுடன் போராடி வெற்றி பெற இந்த விழாவுக்கு வந்துள்ளேன். மருத்துவர்களின் கட்டளையையும் நண்பர்களின் அறிவுரைகளையும் மீறியிருக்கிறேன் அவர்கள் என்னை மன்னிப்பார்களாக''

இந்த ஆண்டில் (1957) தான் சென்னை வானொலி நிலையமும் ஐயா கேட்டுக் கொண்டதற்கிணங்க, சித்திரைத் திங்கள் முழு நிலவு நாளில் இளங்கோவடிகள் விழாவுக்கான நிகழ்ச்சிகளை அமைத்திருந்ததோடு, ஐயா தலைமை வகித்த பொது மக்கள் சார்பிலான நிகழ்ச்சிகளையும் ஒலிபரப்பியது.

இதற்கு முந்திய(1956) ஆண்டில்தான் தமிழரசுக்கழக சார்பில் சிலப்புச் செல்வர் முழு நிலவு நாளில் சென்னை நகரில் தமிழரசுக் கழக சார்பில் இளங்கோ விழாவை நடத்திவைத்தார். இந்த ஆண்டில் கழகத்தின் பெயரால் அல்லாமல் சமுதாயத்தின் பல்வேறு தரப்பினரும் கொண்ட விழாக்குழு அமைக்கப்பட்டது நீதிபதி ஜனாப் பஷீர் அகமது சையது பன்மொழிப் புலவர் தெ பொ. மீனாட்சிசுந்தரனார், பேராசிரியர் அ. சீனிவாசராகவன், அடையாறு கலாக்ஷேத்திர நிர்வாகி திருமதி ருக்மணி அருண்டேல், கப்பனடிப்பொடி சா. கணேசன், முர்ரே கம்பெனி எஸ், இராசம் ஆகியோர் பேசினர்.

(தொடரும்)

திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

அருள்மிகு முருகப்பெருமான் துணைகொண்டு நிகழும் ஆங்கீரச ஆண்டு வைகாசித் திங்கள் 2ம் நாள் (15—5—92) வெள்ளிக்கிழமையன்று காலை 9 மணிக்கு மேல் 10-30 மணிக்குள்ளாக,

எனது மூத்த மகள்
திருநிறைச்செல்வி சசிகலாவுக்கும்
பாலூர் திரு பி. வி. சம்பந்த முதலியார்
இளைய குமாரன்
திருநிறைச் செல்வன் கணேசனுக்கும்

பெரியோர்களால் நிச்சயித்தபடி சென்னை மயிலாப்பூர் அவ்வை சண்முகம் சாலையிலுள்ள நல்வாழ்வு திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெறுகிறபடியால், தாங்கள் தங்கள் குடும்பத்துடன் வந்திருந்து மணமக்களை வாழ்த்தியருள வேண்டுகிறேன்.

இங்ஙனம்
எஸ். கண்ணப்ப முதலியார்
காய்கறி வியாபாரம்
கொத்தவால்சாவடி, சென்னை

ஐயாவின் சிலப்பதிகாரத் தொண்டுக்குப் பொன் விழா

[பேராசிரியர் தி. வ. மெய்கண்டார்]

8

கடல் கடந்த நாடுகளில் சிலம்பொலி!-2

மொரிஷியஸ் தீவில் தமிழர் நடத்திய ஆங்கில சிலப்பதிகார நாடகத்தின் தட்டச்சுப் பிரதியொன்றை தமிழ் லீக் நிர்வாகிகள் ஐயாவுக்கு அன்பளிப்பாகத் தந்தனர். அதை இன்றளவும் அவர் பாதுகாத்து வருகிறார்.

அயல் நாடுகளில் அவர் முதன் முதலாக சிலப்பதிகாரம் பற்றி இருபதினாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் மத்தியில் பேசியது இலங்கையில் பூர்வகுடித் தமிழர் வாழும்யாழ்ப்பாண தீபகற்பத்தில் தான். இன்றளவும் யாழ்ப்பாண மக்களும் அவரது அந்தப் பேச்சைப் பசுமையோடு நினைவில் வைத்துள்ளனர்.

1951 ஏப்ரல் 29,30, மே 1 ஆகிய தேதிகளில் யாழ் நகரில் நடந்த—ஆம்; தமிழக அரசின் தமிழ் வளர்ச்சிக் கழகம் நடத்திய—தமிழ் விழாவில் 'வீரகண்ணகி' என்னும் தலைப்பில் பேசினார்

இந்திய-இலங்கை நாடுகளைச் சார்ந்த தமிழில் பெரும் புலமை பெற்றவர்களெல்லாம் கூடியிருந்தமேடை அது,இந்திய-இலங்கை அரசுகளின் ஒத்துழைப்போடு நடந்த விழா!

தொடர்ந்து 3 நாட்கள் நடந்த விழாவிலே கடைசி நாளில்—கடைசிபேச்சாளராக ஐயாமேடையேறி, ஒன்றரை மணிநேரம் முழங்கினார். இலங்கை வாழ் பூர்வகுடித் தமிழர், இந்திய வமிசாவழித் தமிழர் ஆகிய எல்லோருடைய இதயங்களிலும் ஐயாவுக்கு இடம் கிடைத்தது அந்தப் பேச்சின் வாயிலாகத்தான்!

அடுத்து, மூன்றாவது முறையாக ஐயா அவர்கள் யாழ்ப்பாணம் செல்ல நேர்ந்தது புங்குடு தீவில் நடந்த சிலப்பதிகார விழாவை யொட்டியாகும். அதைப் பற்றி அவரே எழுதியிருப்பதைப் படிப்போம்:

''பண்டித வித்வான் கா பொ. இரத்தினம் பொதுவாழ்வில் புகுந்த தொடக்க காலத்தில் கட்சி அரசியலை வெறுப்பவராகவே இருந்தார். மொழிப்பற்று வேறு; இனப்பற்று வேறு என்று கருதிக் கொண்டு தமிழ்ப் பணியோடு நின்றிருந்த காலத்தில் அவர் என்னோடு தொடர்பு கொண்டார்,

''1951 ஏப்ரலில் யாழ்ப்பாணத்தில் தமிழ் விழா நடந்த பின்னர் சிலப்பதிகார மாநாடு நடத்தவும் பண்டிதருக்கு ஆவல் பிறந்தது. எனது ஆலோசனையையும் பெற்று, புங்குடு தீவு என்னும் ஊரில் மாநாட்டிற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டார்.

''அச்சிற்றூர் யாழ்ப்பாணமாவட்டத்திலிருக்கிறது. அங்குள்ள அம்மன்கோயில் கண்ணகி தேவியின் கோயில் என்றே அழைக்கப்படுகிறது அதனாற்றான் அந்தச் சிற்றூரில் கண்ணகி காப்பியமான சிலப்பதிகாரத்தின் பெயரால் விழா நடத்த பண்டிதர் திட்டமிட்டார்.

''மாநாட்டிற்கானதேதிநெருங்கிக் கொண்டிருந்தபோது வைதிகச் சைவர் சிலர் எதிர்ப்புக் காட்டத் தொடங்கினர். அவர்கள் இளங்கோவடிகளை சமணராகக் கருதினர். அதனால், அவர் படைத்த சிலப்பதிகாரம் சமண காப்பியமென்பது அவர்கள்கண்ட முடிவு. இப்படிக் கருதும் புலவர்கள் இந்தியத் தமிழகத்திலும் இருக்கின்றனர்.

''வித்வான் இரத்தினம் எதிர்ப்புகண்டு மருண்டு, மாநாட்டுத் தேதிக்கு இரண்டு நாட்களுக்கு முன்பே நான் யாழ்ப்பாணம் வந்து, எதிர்ப்பாளர்களைச் சந்தித்துச் சமாதானம் சொல்ல வேண்டுமென்று விரும்பினார். அதன்படி, நானும் முன்கூட்டியே யாழ்ப்பாணம் சென்றேன்.



''அப்போது ஈழத்தமிழர் விடுதலை இயக்கத்தோடும் இலங்கை வாழ் இந்தியவமிசாவழித் தமிழர் நடத்திவந்த தோட்டத்தொழிலாளர் சங்கத்தோடும் எனக்குநேரடியாகத் தொடர்பிருந்ததாலும் யான் நடத்தி வந்த 'தமிழ் முரசு' பத்திரிகைக்கு ஈழத்திலுள்ள புலவர்களில் சிலர் வாசகர்களாக இருந்தனராதலாலும், சிலப்பதிகார எதிர்ப்பாளர்கள் என்பால் தனிப்பட்ட முறையில் பேரன்பு கொண்டிருந்தனர். அதனால், நான் யாழ் நகர் சென்றதும் எதிர்ப்பாளர்களைச் சந்தித்து சமாதானம் கூற முயன்றேன்.

''சிலப்பதிகாரம் சைவத்திற்கு அன்னியமான காப்பியமல்ல வென்பதை வற்புறுத்தினேன். இறுதியாக சிலப்பதிகாரம் சர்வ சமய சமரசக் காப்பியமென்பதை உறுதிப்படுத்தினேன் யாழ்ப்பாணப் புலவர்களும் சமாதானம் அடைந்து சிலப்பதிகார மாநாடு வெற்றிகரமாக நடக்க ஒத்துழைப்புத்தந்தனர்.

''அந்த மாநாட்டில் பன்மொழிப்புலவர் தெ பொ. மீனாட்சிசுந்தரனார், டாக்டர் மு வரதராசனார், பேராசிரியர்அ.ச.ஞானசம்பந்தன், பேராசிரியர்அ.சீனிவாசராகவன், பேராசிரியை அ ரா. இந்திரா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

''புங்குடு தீவில் நடந்த சிலப்பதிகார விழாவில் தமிழ்நாட்டில யாரெல்லாம் பெரும் புலவர்களாகக் கருதப்படுகிறார்களோ அவர்களெல்லாம் எனக்குமுன்பே பேசிவிட்டார்களாதலால், மூன்று நாட்கள் நடந்தவிழாவின்கடைசி நாளில்—கடைசி நபராகவும் பேச வந்துள்ள நான சொல்லுவதற்கு அவர்கள் எதையும் விட்டுவைக்கவில்லை. அதனால், கொஞ்சம் பயந்தான் பேசுவதற்கு! சிலப்பதிகாரக் கதை சிறியதுதான். அதை ஒருகரும்புக்கு ஒப்பிட்டால் பெரும்புலவர்களெல்லாம் அந்தக் கரும்பைப் பிழிந்து சாறெடுத்துக் கொடுத்து விட்டார்கள்அதற்குப் பின் எஞ்சிக்கு வந்தது சக்கைதான். அவர்களெல்லாம் பாவலர்கள். நானோ பாட்டாளி, அதனால், உழைத்து உழைத்து உரமேறிய கையால் பிழிந்து சாறெடுக்க முடியுமென்று நம்புகிறேன்—என்ற முன்னுரையோடு பேசத் தொடங்கினேன். ஒன்றரை மணிநேரம் பேசி, ஈழத்து மக்களை திருப்தியுறச் செய்தேன்''

('ஈழத்தமிழரும் நானும்' பக். 26—30)

சிலம்புச் செல்வர் கொழும்பிலுள்ள புத்த மடத்திற்கு ஒருமுறை சென்று அங்குள்ள புத்த பிக்குகளுடன் பேசியபோது அவர்கள் தமிழை புத்தமதத்திற்குப் புறம்பான—இந்து சமயத்தைச் சேர்ந்தவர்களின் மொழியாக கருதினரென்பதையறிந்து மணிமேகலை காப்பியம் தமிழிலுள்ளதைச் சொல்லி அது பௌத்த காப்பிய மென்பதையும் நினைப்பூட்டியபோது பிக்குகள் வியப்புற்றனரென்று ஐயா தமது 'ஈழத் தமிழரும் நானும்' என்னும் நூலில் கூறியுள்ளார்.

அதன் பின்னர் ஒருமுறை இலங்கை சென்றபோது புத்த பிக்குஒருவர் மணிமேகலைக்காப்பியத்தை தம் தாய்மொழியான சிங்களத்தில் மொழிபெயர்த்து அதை ஐயாவைக் கொண்டே வெளியிடச் செய்தார். அதுபற்றிச் சிலம்புச் செல்வரே எழுதியதைப் பார்ப்போம்:

''பதுளையில் என் பிறந்த நாள் விழா நடந்தது அந் நாட்டின் புத்த சந்நியாசிஒருவர்தமிழிலுள்ளமணிமேகலை காப்பியத்தைச் சிங்களத்தில் மொழிபெயர்த்து அச்சிட்டு வைத்திருந்ததனை என் மணி விழாமேடையில் என்னைக் கொண்டே வெளியிடச் செய்தார். இந்த நிகழ்ச்சியில் பௌத்த சந்நியாசிகள் பலரும் கலந்துகொண்டனர்''

(ஈழத்தமிழரும் நானும்' பக். 114)

(6ம்-பக்கம் பார்க்க)

ஐயாவின் சிலப்பதிகாரத்

(5ம்-பக்கத் தொடர்ச்சி)

ஐயா அவர்கள் 1964 சனவரியில் ஒருமுறை மலேயா சென்று அங்கு சரியாக ஒருமாத காலம் சுற்றுலாச் செய்தார். அப்போது சிங்கப்பூரும் மலேசியாவின் ஒரு மாநிலமாக இருந்தது. பின்னர் அதுதானே விரும்பி தனிநாடாகி விட்டது. மலேசியாவும் எதிர்ப்பின்றி பிரிவினையை ஏற்றுக் கொண்டுவிட்டது.

அதன்பின்னும் 1966ல் மலாசியா -சிங்கப்பூர் ஆகிய இருநாடுகளுக்கும் சென்றார். இந்தமுறை கோலாலம்பூரில் நடைபெற்ற முதலாவது உலகத்தமிழ் மாநாட்டிற்கு தமிழக அரசின் அதிகார பூர்வமான பிரதிநிதியாகச் சென்றார்.

முதல் பயணத்தைப்பற்றி 'மலேசியாவில் ஒரு மாதம்' என்னும் பெயரில் நூல் எழுதி வெளியிட்டுள்ளார். முதல் பயணத்தில் நகரங்களிலும் கிராமங்களிலும் படித்தவர்களிடமும் ரப்பர்தோட்டத்தொழிலாளர்களிடமும்சிலப்பதிகாரம் பற்றிப் பேசினாரென்றாலும் மிகச்சிறப்பாக அமைந்த இரண்டு கூட்டங்கள் பற்றி அவர் கூறுவதைப் பார்ப்போம்:

''பிப்ரவரி (1961) 8,9 தேதிகளில் கோலாலம்பூர் நகரில் நாம் காலை 7 முதல் இரவு 10 மணிவரை கணக்கற்ற நிகழ்ச்சிகள் ஓய்வென்பதே இல்லை. நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் விழுந்துவிடுவேனோ என்னும் பயம்கூட எனக்கு ஏற்பட்டது.

''பிப்ரவரி 8ல் மலேசியா தமிழ் எழுத்தாளர் சங்கச் சார்பில் ஐரோப்பிய பாணியில் அமைந்த அழகிய மாபெரும் மண்டபம் ஒன்றில் இலக்கியக் கூட்டம் நடைபெற்றது அதன்பெயர் 'தேவன் பாஷா(தேசியமொழி)மண்டபம்' என்பதாகும்.

''பிற்பகல் 2-30 மணிக்கு கூட்டம் அமைந்திருந்தும் ஜன வெள்ளம் மண்டபம் நிறைந்து வழிந்தது. மத்திய அரசின் மந்திரி டெத்தோசம்பந்தன் உள்பட அரசியல் தலைவர் பலரும் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் டாக்டர் தனிநாயக அடிகள் உள்பட பெரும்புலவர் பலரும் மேடைமீதும் மேடைக்கெதிரே முன்வரிசையிலும் அமர்ந்து கூட்டத்தைச் சிறப்பித்தனர். 'தமிழ் நேசன்' ஆசிரியர் திரு.முருகு. சுப்பிரமணியம் தலைமை வகித்தார். 'கற்புக் கொழுந்தும்காதற் கொழுந்தும்' என்னும் தலைப்பில் 'கண்ணகி—மாதவி' பற்றிப் பேசினேன்.

('மலேசியாவில் ஒரு மாதம்,' பக் 60-61)

''இரவு 9மணிக்குதொழிலாளர் நிறைந்த கிள்ளான் நகரில் பேசினேன். அங்கு இலக்குமணன் செட்டியார் மண்டபத்தில் வரவேற்புக் கூட்டம் நடந்தது. அது மந்திரி மாணிக்க வாசகம் ஊர். அவரது தொகுதியுங்கூட அதினால் அவரும் கூட்டத்தில் கலந்து கொண்டு என்னை வரவேற்றுப் பேசினார். 'சிலப்பதிகார காலத்தின் பொருளாதாரம்' என்னும் பொருள்பற்றிப் பேசினேன். அரைமணி நேரத்திற்கு மேல் பேச அவகாசமில்லை. நான் அதிகநேரம் பேசாததால் மக்களுக்கு ஏமாற்றம்! சிலர் முணுமுணுத்தனர் என்றுங் கேள்வி!''

(மலேசியாவில் ஒரு மாதம்;' பக். 80)

''என் மலேசிய சுற்றுலா பிப்ரவரி 15ஆம் தேதியோடு முடிந்தது, அன்று சிங்கப்பூர் மாரியம்மன் கோயிலில் கடைசிக் கூட்டம்! கோயிலில் விசாலமான இடமிருந்தும் கூட்டம் அதிகரித்து விட்டதால் வீடுகளின் மாடிகளிலும் மேல்தளங்களிலுமாக மக்கள் நெருக்கியடித்துக் கொண்டு குழுமியிருந்தனர் அன்று 'சிலப்பு காட்டும் செந்நெறி' என்னும் பொருள்பற்றிப் பேசினேன்.

''என் பேச்சைக் கேட்பதிலே சிங்கப்பூர் இளைஞர் மட்டுமன்றி நகர பிரமுகர்களும் பெண்களும் கூட அளவற்ற ஆர்வங்காட்டினர். சுமார் 1-30 மணிநேரம் பேசினேன். தற்காலத்தில் நாட்டில் நடைபெறும் மாரியம்மன் வழிபாடு கண்ணகி வழிபாடு தான் என்பதனைத் தக்க சான்றுகள் காட்டி வலியுறுத்தினேன், கேட்ட மக்கள் நன்கு ரசித்தனர்''

(மலேசியாவில் ஒரு மாதம்;) பக் 116)

மலாசியத் தலைநகரான கோலாலம்பூர் பல்கலைக் கழகத்தில் உலகத் தமிழராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் நடைபெற்ற முதலாவது உலகத் தமிழ் மாநாட்டில் கலந்துகொள்ள 1966ல் ம. பொ சி.இரண்டாவது முறையாக மலாசியா சென்றார்,

அப்போது சிங்கப்பூர் மலாசியாவிலிருந்து பிரிந்துதனிநாடாகியிருந்தது. தமிழக அரசின் பிரதிநிதிக்குழுவில் ஒருவராகத் தான் சென்றார்.

அப்படி யிருந்தும் ஒருவார காலம் நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டில் முதலிரண்டு நாட்களில்தான் சிலப்புச் செல்வர் கலந்துகொண்டார். ''வள்ளலார் வளர்த்த தமிழ்'' என்னும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை தந்தார்.

தாம் நோயுற்றதால் மாநாட்டில் கலந்து கொள்ள இயலாதவராகி மலாசிய சமஷ்டி அரசின் அமைச்சரான டெத்தோ சம்பந்தம் இல்லத்தில் தங்கிசிகிச்சை பெற்றார். இந்தமுறை ஐயாவின் பேரன்புக்குரியவரான ஔவை தி.க. சண்முகமும் அவருடன் மாநாட்டு பிரதிநிதியாகவே சென்றிருந்தார். அங்கு தாம் நோயுற்றபின், தமதுநிலை பற்றி அவரே கூறுகிறார்:

''மலேசியாவுக்கு நான் உற்சாகத்துடன்தான் சென்றேன். அப்போதைய தமிழக முதல்வர் திரு,எம்.பக்தவத்சலனார் அரசு பிரதிநிதிகள் குழுவின் தலைவராக வந்தார். முதல்வர் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் நான் ஆகிய மூவரையும் ஒரே காரில் அமர்த்தி விமான தளத்தில் ஒரு ஊர்வலமே நடத்தி இந்திய தமிழகத்தைப் பெருமைப் படுத்தியது உலகத் தமிழ்மாநாட்டை நடத்திய மலாசிய பல்கலைக்கழகம்.

''முதலிரண்டு நாள் நடவடிக்கைகளில் நான மிகுந்த உற்சாகத்துடன் பங்குபெற்றேன் உற்சாக மிகுதி காரணமாக உணவு விஷயத்தில் யான பல்லாண்டு காலமாகக் கடைப்பிடித்துவரும் பத்தியத்தைக் கைவிட்டேன் அதனால் அடிக்கடி வாந்தியும் மலப் போக்கும் ஏற்பட்டது. வாந்தியில் ரத்தமும் வெளிப்பட்டது, எனக்கு உயிரைப்பற்றிய பயம் ஏற்பட்டதால் மருத்துவமனையில் சேர்த்து கொள்ள விரும்பினேன்.

''ஆனால், சமஷ்டி அரசாங்க அமைச்சரான டெத்தோ சம்பந்தமும் அவருடைய மனைவி திருமதி உமா சம்பந்தமும் தங்கள் வீட்டிலேயே வைத்து,ராஜவைத்தியத்திற்கு ஏற்பாடு செய்வதாக உறுதிகூறி தங்கள் இல்லத்திற்கு அழைத்துச் சென்றனர்.

''ராஜ வைத்தியம்'' என்ற வாசகம் வெறும் கற்பனையன்று. உண்மையிலேயே மலாசிய சமஷ்டியின் மன்னரின் மருத்துவரான டாக்டர் பிள்ளை அவர்களையே தருவித்து எனக்குச் சிகிச்சை தந்தனர். டெத்தோ சம்பந்தம் மந்திரியாதலால்,அரச மருத்துவர் எளிதில் கிடைத்துவிட்டார். திருமதி உமா சம்பந்தம் சகோதரி டாக்டர் திரிபுரசுந்தரியுமென்னைக் கவனித்துக் கொண்டனர்.

திரு டெத்தோ சம்பந்தம் மனைவி இந்தியப் பெண், திருச்சி வாசி. அதனால் என்பால் இருமடங்கு அன்புகாட்டி என் மனத்துக்குப் பிடித்தமான சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தார். அதுதான் என்னைக் காப்பாற்றியது. அது மருத்துவ சிகிச்சையல்ல மனோதத்துவ வழிப்பட்ட இலக்கிய சிகிச்சை!

''உலகத் தமிழ் மாநாட்டிற்கு இசைப்பேரசு டாக்டர் இராமநாதன் அவர்களும் சென்னையிலிருந்து வந்திருந்தார். அவர் சிலப்பதிகாரக் காப்பியத்தில்—குறிப்பாக அதில் வரும் இசைப் பாடல்களில் மிகுந்த பயிற்சியுடையவர். ஆராய்ச்சி நூல்களும் எழுதி வெளியிட்டுள்ளார்.

''திருமதி உமா சம்பந்தம் அம்மையார் என் மனதை நோயிலிருந்து மீட்க சூழ்ச்சி செய்து டாக்டர் எஸ். இராமநாதன் சிலப்பதிகாரப் பாடல்களை இசைக்கருவிகளின் துணையோடு பாடவும், நான் ஒவ்வொரு பாட்டின் முடிவிலும் படுக்கையிலிருந்தபடி அவற்றின் பொருளைக் கூறவும் ஏற்பாடு செய்தார் நான் சுலபத்தில் ஒப்புக்கொள்ளவில்லை. ஆயினும் மனோதிடந்தான் மருந்தெனவும் உயிர்காக்கும் என்பதில் நம்பிக்கை யுடையவனாதலால், மந்திரியார் மனைவியின் அன்புக்கட்டளையை ஏற்றுக் கொண்டேன்.

''அம்மையார் பிரபல குடும்பங்களைச் சார்ந்த 50 பேருக்கு சிறப்பு அழைப்பு விடுத்து, அவர்களுக்கு மாலைச் சிற்றுண்டிக்கும் ஏற்பாடு செய்திருந்தார்.

''மந்திரியின் மாளிகையாதலால் 50 பேர்—அவ்வளவுபெரும் பெண்கள் — கொள்ளுமளவுக்கு இடவசதி இருந்தது. அன்பர் இராமநாதன், ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை பாடல்களைப் பாடினார். எனக்கு உயிரளிக்கப் பாடினாராதலால், அன்றுபோல அதற்கு முன்னும் பின்னும் அவர் அவ்வளவு உருக்கமாகப் பாடி நான் கேட்டதில்லை. வித்துவத்தை வெளிப்படுத்துவதை விடவும் பக்தியை வெளிப்படுத்தும் குறிக்கோளுடனேயே பாடினார்.

(4ம் பக்கம் பார்க்க)

கேரள மாநிலத்தில் கண்ணகி வழிபாடு

(ம. பொ. சி)

தமிழக—கேரள எல்லையிலுள்ள கண்ணகி கோயிலை ஆண்டுதோறும் சித்திரை முழு நிலவு விழா நாளில் தமிழகத்தார் சென்று வழிபடவேண்டுமென்பது நம் நெடுநாளைய விருப்பம்.

சித்திரை திங்கள்முழுநிலவு நாளில் 1965ல் இளங்கோவடிகள் விழாவை சென்னை நகரில் தொடங்கி அது பூம்புகாரில் ஆண்டுதோறும் தமிழக அரசாலேயே கொண்டாடப்பட்டு வருவது அனைவரும் அறிந்ததே.

இளங்கோ விழாவுக்கு நாம் தேர்ந்தெடுத்த அதே சித்திரைத் திங்கள் முழுநிலவு நாளில் (17-4 92) இந்த ஆண்டில் கண்ணகி விழா நடந்திருப்பதாக செய்தித் தாள்கள் கூறுகின்றன.

இந்த விழாவை நடத்த இதுவரை கேரள அரசு தமிழகத்தாரை அனுமதிக்கவில்லை அதனால்,இது தமிழக-கேரள மக்களிடையிலான ஒரு எல்லைப் பூசலாகவே உருவெடுத்தது தமிழகத்திலுள்ள சில அரசியல் வாதிகளும் இதற்குக் காரணமாவர், ஆனால், கூடல் திரு. தா இராமசாமி அவர்கள் எத்தகைய அரசியல் சார்புமின்றி கண்ணகி விழாவை நடத்தக் கடந்த பல ஆண்டுகளாக முயன்று வந்தார்.

அதற்காக எனக்கு பல முறை கடிதங்களும் எழுதினார். நானும் திரு ப ராமச் சந்திரனும், திருமதி சோதி, வெங்கடாசலம் அம்மையாரும் கேரள ஆளுநர் பொறுப்பிலிருந்தபோது, அவர்கள் மூலம் முயற்சி எடுத்தேன். அவர்கள் கருத்துப்படி கேரள முதல்வருடன் கடிதப்போக்குவரத்தும் நடத்தினேன்.

ஆனால், தி.மு.க. ஆட்சிக் காலத்திலே, கண்ணகி கோவில் வழிபாட்டுப்பிரச்னையை தமிழக—கேரள எல்லைப் பிரச்னையாக மாற்றக் கூடிய வகையில் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. தமிழக அரசுக்கு அந்த எண்ணம் இல்லையென்பது பின்னால் தெளிவுபடுத்தப்பட்டதென்றாலும் கேரள அரசின் அச்சம் அகல வில்லை.

அதனால், கண்ணகி கோயிலுக்குச் சென்று தமிழர் வழிபாடு நடத்த அனுமதிக்கப்பட வில்லை.

நல்ல வேளையாக, இந்த ஆண்டு சித்திரைத் திங்கள் முழுநிலவு நாளிலே ஒருநாளைக்குமட்டும் தமிழக மக்கள் மங்கலதேவியின் கண்ணகிகோட்டம் சென்று வழிபாடு நடத்த கேரள அனுமதித்திருந்தது. இது தமிழகத்துக்கு மகிழ்ச்சி தருகிறது, ஆனால், மூன்று நாட்கள் விழா நடத்த அனுமதிக்கப்படவில்லை. முழு நிலவு நாள் அன்றுமட்டும் தான் அனுமதிக்கப்பட்டதாம். அன்றும் கேரள அதிகாரிகள் 'கெடுபிடி' இருந்ததாகத் தெரிகிறது.

நானே கண்ணகி விழாவில் கலந்துகொள்ள விரும்பினேன். ஆயினும் நான்செல்வதனால் அது அரசியலாகிவிடுமோ என்று அஞ்சினேன். அதனால், செல்வதைத் தவிர்த்தேன்.

இதற்கென்றே பல ஆண்டுகள் பாடுபட்டுவந்த கூடல் திரு.தா.ராமசாமி அவர்களை பாராட்டுகிறேன். அவர்இதற்கென்றே 'கண்ணகி அறக்கட்டளை' அமைத்து அதன் தலைவராக இருந்துமுயன்று வந்தார்.

அவரையும் கேரள அரசையும் பாராட்டுகிறேன் இந்த ஆண்டில் சிலப்பதிகாரத்தைப் பதிப்பித்த நூறாவதாண்டு நினைவாக பதிப்பாசிரியரான டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் விழாவை பிராமணர் சங்கத்தார் சென்னை ஆர். ஆர். சபாவில் அரசியல் கட்சிவேறுபாடு—கட்சிக்குள் கோஷ்டி வேறுபாடு பாராமல் அனைவரையும் அழைத்துவைத்து கொண்டாடினர் டாக்டர் உ.வே சா. சமய வேற்றுமை பாராமல்தானே சமண— பௌத்த காப்பியங்களைப் பதிப்பித்துத்தந்தார் ஆகவே. அவரது சாதனைகளும் அப்படித்தானே கொண்டாடப் படவேண்டும். அப்போது

மத வேறுபாடு தமிழின மக்களைப் பிளவுபடுத்தியது. இப்போது அரசியல் கட்சிவேறுபாடும் கட்சிக்குள் குழுவேறுபாடும் தமிழரைப் பிரித்துப் பிளவுபடுத்துகின்றன

அப்படிக்கின்றி, கண்ணகி விழா சிறப்பாகவும் அமைதியாகவும் கட்சி அரசியல்—கோஷ்டி அரசியல் கலக்காமலும் நடந்ததற்காக மகிழ்ச்சி அடைகிறேன்.

வாழ்க, கண்ணகி புகழ்!

'செங்கோல்'
சந்தாதாரராகச்
சேருங்கள்

ஔவையாருக்கு விழா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாள்கொண்டாட இந்தஆராய்ச்சி தடையாகாது

ஔவையாரை மகாகவி பாரதியார் தன் கவிதைகளிலே, கட்டுரைகளிலே குறிப்பிட்டுப் பெருமைப்படுத்தியிருக்கிறார் கபிலர் ஔவையாரின் உடன்பிறப்பென்றும் ஒரு கதையுண்டு.

தனிமனிதப் பண்பாட்டுக்கு கபிலர் மிகச்சிறந்த எடுத்துக்காட்டாக வாழ்ந்திருக்கிறார். தமிழ்மூவேந்தருக்கு எதிராக குறுநில மன்னனான—ஒரு குன்றின் தலைவனான பாரிவேந்தனை ஆதரித்தார். அவன் மாண்டபோது மறுபிறப்பிலும் அவனோடுசேர்ந்து வாழவிரும்பி வடக்கிலிருந்து உயிர்விட்டாரென்பது வரலாறு!

பாரி இறந்தபின் அவன் மகளிரிருவருக்குத் திருமணம் செய்துவைக்க அவர் அரும்பாடுபட்டார் பெருநில மூவேந்தருக்கஞ்சிக் குறுநில மன்னர்களிலெவரும் பாரிமகளிரை மணக்கமறுத்தனர்.

கபிலர் பாரதத்தின் தற்போதைய மொழிப்பிரச்னைதீர வழிகாட்டியாக வாழ்ந்தார் அவர் ஆரியமன்னன் பிரகத்தன் என்பவனுக்கு தமிழறிவித்தார். அதற்கெனவே குறிஞ்சிப்பாட்டு என்ற பெயரில் இலக்கியம் படைத்தார்.

கபிலருக்கு ஆரியமொழிதெரிந்திருந்ததால்புலவேந்தனுக்குத் தமிழ் கற்றுத் தந்தார் எழுத்தும் சொல்லும் போதித்ததோடு தமிழுடைய வாழ்க்கை நெறியையும் போதித்தார், அதை நினைக்கும் போதெல்லாம் எனது நெஞ்சு இனிக்கிறது.

இப்போதெல்லாம் கம்பருக்கு வள்ளுவருக்கு விழாக்கள் நடத்திப் பட்டி மன்றங்கள்—கவியரங்குகள்—வழக்காடு மன்றங்கள் நடத்தப்படுகின்றன. அதுபோல, ஔவையார் பெயராலும் கபிலர் பெயராலும் நாடுமுழுவதிலும் நடத்தலாமே! தொலைக் காட்சியும் வானொலியும் இதைத் தொடங்கி வைக்கலாமே!

முன்பெல்லாம் புராணிகர்களிலே பெரிய புராணப்பிரசங்கியார் கந்தபுராணப் பிரசங்கியார் என்றெல்லாம் பெயர்பெற்றவர்களிருந்தார்கள் இப்போது புராணிகர்கள்கூட பெரிய புராணத்தை

(8ம் பக்கம் பார்க்க)

ம-பொ-சி சுற்றுலா

திரு சோம.சாமிநாதன் 71வது பிறந்த நாள் விழா

இன்ப நிலையம் என்னும் பெயரில் பதிப்பகம் நிறுவி, முதன் முதலில் ஐயா ம. பொ. சி அவர்களின் நூல்களையும், பின்னர் நாமக்கல் கவிஞர் நூல்களையும் டாக்டர் திரிபுரசுந்தரி (லட்சுமி) ஆகிய நாவலாசிரியர்களின் நாவல்களையும் வெளியிட்டு தமிழ் வளர்ச்சிக்குத் தொண்டு புரிந்த திரு.சோம. சுவாமிநாதன அவர்கள் தமது 71ஆவது ஆண்டு பிறந்த நாள் விழாவைத் தமது இல்லத்தில் எளிமையாகக் கொண்டாடினார்.

சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள் விழா நாயகருக்கு சந்தனமாலை அணிவித்து வாழ்த்துக் கூறினார்.

திரு சாமிநாதன், சிலம்புச் செல்வருடன் வடமாநிலங்களுக்கும், பர்மா, இலங்கை ஆகிய அயல் நாடுகளுக்கும் சென்று வந்துள்ளார்.

'தமிழன் குரல்' என்னும் மாத இலக்கிய இதழொன்றைத் தமது சொந்தப் பொறுப்பில் நடத்தி ஐயா ம. பொ. சி. அவர்கள் ஆசிரியராக இருந்தார்.

திரு. சோம. சுவாமிநாதன் அவர்களுடைய மகன்கள், மகள்கள். மருமகனகள் மருமகள்கள் ஆகிய குடும்பத்தார் வந்திருந்தவர்களை வரவேற்று, விருந்தளித்து உபசரித்தனர்.

திரு. சோம. சுவாமிநாதன் தமது பிறந்த நாளை யொட்டி 'செங்கோல்' வளர்ச்சி நிதிக்கு ரூ 1001 ஐயா ம. பொ. சி. யிடம் கொடுத்தார்

திருத்தணிகை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயில் திருவேற்காடு தேவி கருமாரி கோயில் ஆகியவற்றின் முன்னாள் அறங்காவலர் திரு. அ. கோபால கிருஷ்ணன், வானதிபதிப்பக உரிமையாள திரு, திருநாவுக்கரசு விசாலாட்சி பதிப்பக உரிமையாளர் திரு தணிகைமலை உள்ளிட்ட பிரமுகர் பலர் வந்திருந்து மலர்மாலைகளும் புத்தாடைகளும் அணிவித்து வாழ்த்துக்கூறினர்,

திரு கி.வேங்கடராமன் காசி யாத்திரை

திருவானைக்காவல் கிருஷ்ணா அரிசி ஆலை உரிமையாளர் திரு, கி. வேங்கடராமன் அவர்கள் தமது குடும்பத்தாருடனும் சுற்றத்தாருடனும் மே மாதம் முதல் வாரத்தில் காசியாத்திரை சென்றார். சென்னையில் மே 3ஆம் நாளன்று சிலப்புச் செல்வர் அவர்களைச் சந்தித்து அவரது ஆசியைப் பெற்றார்.

தமது புனிதத்தல யாத்திரையை யொட்டி 'செங்கோல்' வளர்ச்சிக்கு ரூ 251ஐ ஆசிரியர் ம. பொ சி அவர்களிடம் அளித்தார்.

ஔவைக்கு விழா...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

யும் கந்தபுராணத்தையும் அடியோடு புறக்கணித்து கம்பராமாயணத்தையும் வில்லிபாரதத்தையும்தான் பிரசங்கிக்கிறார்கள், காரணம், அவர்கள் கதை நடத்திப் பெயரெடுக்க ராமாயணமும் பாரதமும் உதவி புரிவதுபோல பெரியபுராணமும் கந்தபுராணமும் உதவதில்லை யென்பது தான்.

அந்த இரண்டையும் மாதக் கணக்கில் நடத்தமுடிகிறது. ஆயினும், பெரியபுராணத்தில் வரும் திருத்தொண்டர்கள் தமிழருக்கு சொந்தக்காரர்கள். கந்தபுராண நாயகனான கந்தப்பெருமான் தமிழ்த் தெய்வம். அவர்களை மறக்கலாமா? மறந்தால் உலகில் நமக்கேது மதிப்பு?

தமிழரிலே சிலர் கம்ப ராமாயணத்தை எதிர்த்தபோது அந்த எதிர்ப்புக்கு எதிர்ப்பு காட்டி ஒரு இயக்கமே நடத்தினேன். அதே நேரத்தில் அவர்கள்வலியுறுத்திய இனப்பற்றுக்குரிய ஒரே இலக்கியமான சிலப்பதிகாரத்தை நாட்டில் பரப்பினேன்.

இந்தியில் இராமாயணமும் மகாபாரதமும் சாணக்கியாவும் தொலைக்காட்சியில் வாரந்தோறும்காட்டினால் நம்மில்சிலர் பகுத்தறிவுவாதம் பேசி ஆரிய—திராவிட இனவாதம் பேசி எதிர்ப்புக் காட்டுகிறார்கள். நானோ சீதையும் பாஞ்சாலியும் தொலைக்காட்சிப் பெட்டிகள் வாயிலாக நம்மவர் இல்லந்தோறும் காட்சியளிப்பது போல, அதேதொலைக்காட்சியின் துணைகொண்டு இமயம்வரை கற்பரசி கண்ணகியையும் கலையரசி மாதவியையும் மெய்ஞ்ஞானி மணிமேகலையையும் கொண்டுபோக ஏற்பாடு செய்தேன்! அதை வடவர் எதிர்க்கவில்லை; ஏற்றுக்கொண்டார்கள். ஆனால், தமிழகத்தில்தான்—தமிழரேதான் நீதிமன்றத்தில் வழக்கு போட்டார்கள். இந்தத் தமிழர் உருப்படுவார்களா?

தமிழர் தமிழின உணர்ச்சி கொள்ள வேண்டும், தமிழிலேயே பேசவேண்டும் அன்னிய மொழியை அவசியமானால் கற்போம்! ஆனால், தமிழர் வாழ இங்கிலீஷையும் இந்தியையும் கற்போம்! கபிலர் ஆரியமொழி கற்று பிரகத்தனுக்கு தமிழ் அறிவித்ததுபோல, உலகுக்கெல்லாம் தமிழ் போதிக்க நம்மில் சிலர் மட்டுமே இங்கிலீஷ் கற்றால் இந்தி கற்றால் போதுமே! வேலைக்காரி நிலையில் பிறமொழிகளை வீட்டுக்காரியாக்கிவிடக் கூடாது!

பெற்றெடுத்த தாய்மீதுசெலுத்துவது பக்தி! தாலி கட்டிக் கொண்ட மனைவிமீது செலுத்த வேண்டியது அன்பு! வேலைக்காரிமீது செலுத்துவது கருணை வேலைக்காரியாக வந்த ஆங்கிலத்தை வீட்டுக்காரியாக்கி விட்டோம்!இந்த நிலை மாற கபிலர் விழா நடத்துவோர் முன் வருவார்களாக!

நடக்க இருப்பவை

15-5-92 வெள்ளி: சென்னை—கொத்தவால்சாவடி வணிகர் திரு. கண்ணப்ப முதலியார் மகள் செல்வி சசிகலாவுக்கும் செல்வன் கணேசனுக்கும் திருமணம் இடம்: லாயிட்ஸ் சாலை நல்வாழ்வு திருமண மண்டபம் நேரம்: காலை 9 மணி.

16-5-92 சனி: சென்னை—மாலை 6 மணிக்கு எழும்பூர் மகாபோதி மடத்தில் புத்த ஜெயந்தி.

17-5-92 ஞாயிறு: சென்னை—காலை 10-30 மணிக்கு நெல்லை நல்வழி நிலையத் தலைவர் நெல்லை இராசானந்தம், இல்லத்தில் திருமணம், இடம்: மயிலை கற்பகாம்பாள் ஓட்டல்.

24-5-92 ஞாயிறு: சென்னை—மாலை 6மணிக்கு ஆவார்பேட்டை நாரதகான சபாவில் அங்குவிலாஸ் வீடியோ செட் திறப்பு விழா.

தந்தி . பெரியார்
தொலைபேசி எண்கள: 33213
இல்லம்: 31922
தமிழக எண்ணெய்ப் பலகாரம்
தயாரிப்பு & விற்பனை நிலையம்,
92, திருப்பரங்குன்றம் சாலை—மற்றும் கிளைகள்.
உரிமையாளர்: பே. தேவசகாயம்—மதுரை.

ஆசிரியர், வெளியிடுபவர் : டாக்டர் ம. பொ. சிவஞானம், 18 இரசப்ப கிராமணி தெரு, திருவல்லிக்கேணி சென்னை—600005.
அச்சிடுபவர் : இ. வ. கிருஷ்ணன் ஒரு அச்சகம் 19, இரசப்ப கிராமணி தெரு, திருவல்லிக்கேணி சென்னை—600005 போன் : 844871